

# 04.05.2026 செய்திகள்

## இனி 'ஒரே நாடு, ஒரே கேஓய்சி'

- இந்திய நீதித்துறையில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவரவும், வாழ்கையாளர்களின் அலைச்சலைக் குறைக்கவும் மத்திய அரசு அறிமுகப்படுத்திய CKYC (Central Know Your Customer) முறை, தற்போது வங்கி மற்றும் முதலீட்டுத் துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.
- முன்பெல்லாம் ஒரு நபர் புதிய வங்கி கணக்கு தொடங்கவோ அல்லது பங்குச் சந்தையில் முதலீடு செய்யவோ விரும்பினால், ஒவ்வொரு நிறுவனத்துக்கும் தனித்தனியாக அடையாளச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.
- இந்தப் பெரும் சுமையைக் குறைப்பதே இந்த 'மத்திய வாடிக்கையாளர் விவரப் பதிவகத்தின் முக்கிய நோக்கமாகும்.

» **என்ன இந்த சிகேஓய்சி?**

- மத்திய அரசின்கட்டுப்பாட்டில் இயங்கும் CERSAI (Central Registry of Secuntisation Asset Reconstruction and Security interest of india) அமைப்பால் நிர்வகிக்கப்படும் ஒரு டிஜிட்டல் களஞ்சியமே இது ஒருமுறை நீங்கள் ஏதேனும் ஒரு நிதி நிறுவனத்தில் முறையாக KYC விவரங்களை அளித்து விட்டால், அவை டிஜிட்டல் முறையில் இந்தப் பதிவகத்தில் சேமிக்கப்படும்.

» **இது எவ்வாறு செயல்படுகிறது?**

- பதிவு: தங்கள் வங்கியில் கணக்கு தொடங்கும்போது சமர்ப்பிக்கும் ஆதார், பான் கார்டு மற்றும் புகைப்படங்கள் சரி பார்க்கப்பட்டு CKYC தளத்தில் பதிவேற்றப்படும்.
- 14 இலக்க எண் உங்கள் விவரங்கள் பதிவேற்றப்பட்டவுடன், உங்களுக்கு ஒரு தனித்துவமான 14 இலக்க CHYC எண் ஒதுக்கப்படும்.
- பகிர்வு: எதிர்காலத்தில் நீங்கள் வேறு ஒரு காப்பீட்டு நிறுவனத்திலோ அல்லது பரஸ்பர நிதி (MutuaTFund) நிறுவனத்திலோ கணக்கு தொடங்கும்போது, உங்கள் 14 இலக்க எண்ணை எண்ணை மட்டும் வழங்கினால் போதுமானது.
- அவர்கள் மின்னணு முறையில் உங்கள் விவரங்களை இந்தப் பதிவகத்திலிருந்து பெற்றுக்கொள்வர்.

» **முக்கிய நன்மைகள்:**

- நேர விரயம் தவிர்ப்பு: ஒவ்வொரு முறையும் சான்றிதழ்களில் நகல்களை (Xerox) இணைக்க வேண்டிய அவசியம் இல்லை.
- பாதுகாப்பு: உங்கள் ஆவணங்கள் மத்திய அரசின் பாதுகாப்பான சர்வரில் சேமிக்கப்படுவதால், முறைகேடுகள் தடுக்கப்படுகின்றன

## 'கிளாட் மித்தோஸ்' ஏன் ஆபத்து?

- 'கிளாட் மித்தோஸ்' ஏஐ என்பது எண்ம (டிஜிட்டல்) துறையின் சிறு தவறுகளையும் கண்டறிந்து வெளிப்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்றது.
- மென்பொருள்களில் மனிதர்களால் கண்டுபிடிக்க முடியாத மிகச்சிறிய தவறுகளையும் இதன் மூலம் கண்டறியலாம்.
- இதுவரை மிகவும் பாதுகாப்பானது என்று தகவல்தொழில்நுட்ப உலகம் நம்பியிருந்த பல மென்பொருள் தவறுகளையும், 27 ஆண்டுகளாக கண்டுபிடிக்கப்படாமல் இருந்த பிழைகளையும் கிளாட் மித்தோஸ் கண்டறிந்துள்ளது.
- இது ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படும்போது தொழில் நுட்பத்தை மேம்படுத்த பெரிதும் உதவியாக இருக்கும்.
- அதே நேரத்தில் இந்த ஏஐ தவறான நபர்களால் பயன்படுத்தப்பட்டால் ஒரு கணினியைப் பயன்படுத்தி ஒட்டுமொத்த வங்கிக் கட்டமைப்பையே சீர்குலைக்கும் ஆபத்து உள்ளது.
- எனவேதான் இந்தியாவில் மட்டுமல் லாது சர்வதேச அளவில் இணையவழிப் பாதுகாப்பை மேம்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- முதலீட்டு எளிமை: பங்குச் சந்தை மற்றும் காப்பீட்டுத் துறையில் உடனடியாக முதலீடுகளை மேற்கொள்ள இது வழிவகை செய்கிறது.
- புதுப்பித்தல் எளிது: உங்கள் முகவரி அல்லது கைபேசி எண் மாறினால், ஒரு இடத்தில் மாற்றினால் அது அனைத்து நிதி நிறுவனங்களுக்கும் தானாகவே சென்றடையும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

» எப்படி சரிபார்ப்பது?

- வாடிக்கையாளர்கள் தங்கள் CKYC நிலையை சம்பந்தப்பட்ட வங்கி இணையதளங்கள் அல்லது KRA (KYC Registration Agency) போர்ட்டல்கள் மூலம் சரிபார்க்கலாம், உங்கள் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணிற்கு இதுகுறித்து குறுஞ்செய்தியும் அனுப்பப்படும்.
- டிஜிட்டல் இந்தியாவின் அடுத்த கட்டமாகப் பார்க்கப்படும் இந்தத் திட்டம், சாதாரண குடிமகன் வங்கிச் சேவைகளை அணுகுவதை மேலும் எளிதாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை.
- நீங்கள் இதுவரை CKYC பதிவு செய்யவில்லை. எனில், உங்கள் வங்கி மேலாளரை அணுகி ஆவணககளைப் புதுப்பிப்பதன் மூலம் இந்த 14 இலக்க எண்ணைப் பெறலாம்.

## 30 ஆண்டு உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட ஜப்பான்

- இரண்டாம் உலகப்போருக்குப்பிறகு ஜப்பான் அடைந்த அசுர வளர்ச்சி உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியது ஒரு காலத்தில் மேட் இன் ஜப்பான் (Made in Japan) என்றாலே அது தரம் மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் அடையாளமாகத் திகழ்ந்தது.

» 30 ஆண்டுகால தேக்கம்

- 1980-களின் நடுப்பகுதியில், ஜப்பானிய யென் (Yen) மதிப்பு அமெரிக்க டாலருக்கு எதிராக மிகவும் வலுவடைந்தது. இதனால் ஜப்பானின் ஏற்றுமதி பாதிக்கப்படாமல் இருக்க, ஜப்பான் மத்திய வங்கி வட்டி விகதங்களைக் குறைத்தது.
- இதனால் வங்கிகளில் கடன் எளிதாகக் கிடைத்ததால், தனிநபர்களும் நிறுவனங்களும் அதிக அளவில் நிலம் மற்றும் பங்கு சந்தைகளில் முதலீடு செய்யத் தொடங்கினர். இதனால், பங்குச் சந்தை மற்றும் ரியல் எஸ்டேட் விலைகள் மிக வேகமாக உயர்ந்தன.
- 1990-களின் தொடக்கத்தில், இந்த விலை உயர்வு ஆபத்தானது என்று உணர்ந்த ஜப்பான் அரசு, வட்டி விகிதங்களை உயர்த்தியது. இதனால் கடன் வாங்குவது கடினமானதால் சொத்து விலை குறையத் தொடங்கியது. சில ஆண்டுகளில் பங்குச் சந்தை மற்றும் நிலத்தின் மதிப்பு பெரும் 10% முதல் 80% வரை சரிந்தது.
- இது சொத்து மதிப்புக் குமிழி (Asset Bubble) வெடிப்பு என கருதப்படுகிறது. மக்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாததால் வங்கிகள் பெரும் நஷ்டத்தைச் சந்தித்தன. அதன் பிறகு அந்த நாடு 'பணவாட்டம் (Defiation) என்ற பிடியில் சிக்கியது. இதன் பாதிப்புகள் ஒரு தலைமுறையையே மாற்றியமைத்தன.

» விலை, சம்பள உயர்வு இல்லை:

- கடந்த 30 ஆண்டுகளாக ஜப்பானில், பொருட்களின் விலை உயரவே இல்லை. விலை உயராததால் நிறுவனங்களின் லாபம் அதிகரிக்கவில்லை இதனால் ஊழியர்களின் சம்பளமும் உயரவில்லை. ஒரு முழு தலைமுறைமக்கள் பணவீக்கம் (Inflation)என்றால் என்னவென்றே தெரியாமல் வளர்த்துள்ளனர். இது நுகர்வோர் மனநிலையில் ஒருவிதத் தேக்கத்தை ஏற்படுத்தியது. நாளை விலை குறையும்' என்ற எதிர்பார்ப்பில் மக்கள் செலவு செய்வதைத்தவிர்த்தனர்.

» வட்டி விகித சவால்:

- பொருளாதாரத்தை ஊக்குவிக்க ஜப்பான் மத்திய வங்கிவட்டிவிகிதத்தை நீண்ட காலமாக பூஜ்யம் அல்லது அதற்கும் குறைவாக வைத்திருந்தது. வங்கிக் கணக்கில் பணம் வைத்திருந்தால் அதற்கு வட்டி கிடைக்காது என்ற நிலையிலும், மக்கள் முதலீடுகள். செலவு செய்வதைத் தவிர்த்து சேமிப்பதற்கே முன்னுரிமை அளித்தனர்.

» பங்குச் சந்தை:

- ஜப்பானின் நிக்கேய் (Nikkei) பங்குச் சந்தை குறியீட்டெண் நீண்ட காலமாகப் பெரிய வளர்ச்சியைக் காணவில்லை. 1989ல் எட்டிய உச்சத்தை மீண்டும் தொட சுமார் 35 ஆண்டுகள் (2024) ஆனது. இது ஜப்பானிய நிறுவனங்கள் உலகளாவிய போட்டியில் பின்தங்குவதைக் காட்டியது.

» ஜப்பானின் மறுமலர்ச்சி:

» பொருளாதாரப் பாதுகாப்பு:

- காய்ச்சியின் மிக முக்கியமான பங்களிப்பு 'பொருளாதார பாதுகாப்புச் சட்டம்' ஆகும். செமிகண்டக்டர் மற்றும் முக்கியமான தொழில்நுட்ப உதிரிபாகங்களை ஜப்பானிலேயே உற்பத்தி செய்ய இவர் முன்னுரிமை அளிக்கிறார்.
- இது பிற நாடுகளின் மீதான குறிப்பாக சீனா ஜப்பானின் சார்புநிலையை குறைத்துள்ளது.

» பணவீக்கத்தின் வருகை:

- 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஜப்பானில் பணவீக்கம் 2% இலக்கைத் தாண்டியுள்ளது. காய்ச்சியின் ஆரசு இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, நிறுவனங்களைச் சம்பள உயர்வு வழங்கத் தூண்டுகிறது.
- 2024-2026 காலக்கட்டத்தில் ஜப்பானிய நிறுவனங்கள் வரலாறு காணாத ஊதிய உயர்வை அறிவித்துள்ளன.

» பங்குச் சந்தை சாதனை:

- கார்ப்பரேட் நிர்வாக சீர்திருத்தங்கள் காரணமாக, ஜப்பானிய பங்குச் சந்தை (Nikkei 225) 2004-ம் ஆண்டு 30 ஆண்டுக்கு முந்தைய உச்சத்தைக் கடந்து, மேலும் உச்சங்களை எட்டி வருகிறது. இதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஜப்பானை மீண்டும் ஒரு பாதுகாப்பான முதலீட்டுத் தளமாகப் பார்க்கத் தொடங்கியுள்ளனர்.

## சுகாதாரக் கட்டமைப்புகளைச் சீர்குலைக்கும் காலநிலை மாற்றம்

- அண்மையில் காலநிலை மாற்றம் தொடர்பாக ClimateRISE alliance என்னும் ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை தேசியப் பொதுச் சுகாதாரத் துறையின் கவனத்தை ஈர்த்துள்ளது.
- 'இந்தியாவின் காலநிலை – சுகாதாரச் சந்திப்புகள் மீள்திறனுக்கான பாதைகள்' என்கிற தலைப்பில் வெளிவந்துள்ள அந்த அறிக்கை, காலநிலை மாற்றங்கள் இனிமேல் இந்தியாவில் சுற்றுச்சூழல் சார்ந்த கவலைகளை மட்டும் கொண்டுவரப்போவதில்லை;
- பொதுச் சுகாதாரக் கட்டமைப்புகளுக்கும் சவால்விடும் அளவுக்கு அவை வளர்ந்துவருகின்றன என்று எச்சரித்துள்ளது.
- 'கடந்த 30 ஆண்டுகளில், காலநிலை மாற்றத்தால் உலக அளவில் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியா ஆறாவது இடத்தில் இருக்கிறது.

» அதிகரிக்கும் தொற்றுநோய்கள்

- மிகவும் வெளிப்படையாகத் தெரிகிற தாக்கங்களில் முக்கியமானது, டெங்கு பாதிப்பு. உலகளாவிய டெங்கு பாதிப்பில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவில்தான் இருக்கிறது.
- அதிகரித்துவரும் வெப்ப அலைகளும் மாறிவரும் மழைப்பொழிவுகளும் மலேரியா, சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்களை இந்தியாவில் இதுவரை தாக்கம் செலுத்தாத இடங்களுக்கும் பரப்புகின்றன.
- முன்னர் குறைந்த அளவிலான பாதிப்புகளைப் பதிவுசெய்த இமாச்சலப் பிரதேசம், ஜம்மு– காஷ்மீர் உள்படப் பல குளிர்ப் பகுதிகளில் டெங்கு பாதிப்பு அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. மேலும், திடீர் வெள்ளப்பெருக்கு பொதுச் சுகாதார அபாயங்களை இன்னும் தீவிரப்படுத்துகிறது.
- எடுத்துக்காட்டாக, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதும் குடிநீருடன் அசுத்த நீரும் கலந்துவிடுவதால் கல்லீரல் அழற்சிக் காமாலை ஏ, காலரா, ஈ. கோலை என்னும் பாக்டீரியா தொடர்பான குடல் நோய்கள் அதிகமாகப் பரவுகின்றன.
- வெள்ளம் வடியும் போது, லெப்டோஸ்பைரோசிஸ் என்னும் எலிக் காய்ச்சலும் பரவுகிறது. ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கினால் மட்டும் 5,000க்கும் அதிகமானோர் உயிரிழக்கிறார்கள். இந்த எண்ணிக்கை இனி வரும் காலத்தில் அதிகரிக்கும் என்றும் அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

» பாதிக்கும் தொற்றாநோய்கள்

- காலநிலை மாற்றத்தால் தொற்றுநோய்கள் தான் பரவும் என்று இதுவரை கூறப்பட்டது.
- இப்போது வெளிவந்துள்ள அறிக்கையில் தொற்றா நோய்களும் பாதிக்கும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

- வெப்ப அலைகளின்போது இந்தியாவில் மனித உயிரிழப்புகள் அதிகரிப்பதைச் சுட்டிக் காட்டும் பல அறிக்கைகளில், அதிகரித்துவரும் வெப்ப அலைகளுக்கும் இதயநோய்க்கும் தொடர்பு இருப்பதைக் காண முடிகிறது.
- இந்தியாவில் நிகழும் உயிரிழப்புகளில் மூன்றில் ஒரு பங்கு இறப்புகள் இதய நோய்களால்தான் ஏற்படுகின்றன என்பதால், இந்த எச்சரிக்கையை எளிதில் கடந்துபோக முடியவில்லை.
- அதிகரிக்கும் காற்று மாசுபாடு இந்தத் தொற்றாநோய்களின் சுமையைக் கூட்டுகிறது.
- காற்று நுண்மாக்கள் (PM2.5) மிகுந்த இடங்களில் பணிபுரிவோருக்குச் சிறுநீரக நோய்கள் ஏற்படும் சாத்தியம் அதிகரிக்கிறது.
- உலகின் மிகவும் மாசுபட்ட 30 நகரங்களில் இந்தியாவில் மட்டும் 17 நகரங்கள் இருக்கின்றன. டெல்லியில் நிலவும் காற்று மாசுபாடு உலகளாவிய சுகாதார வழிகாட்டுதல்களைக் கணிசமாக மீறுகிறது.
- மேலும், நீண்ட காலத்துக்குத் தீவிர வெப்ப அலைகளுக்கு ஆளாகும் தொழிலாளர்களுக்குச் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படவும் வாய்ப்பு உண்டு என்று இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

» **தாய் சேய் நலனில் தாக்கம்**

- சமீபத்திய ஆண்டுகளில் வெப்ப அபாயங்கள் தாய் சேய் நலனிலும் தாக்கங்களை ஏற்படுத்திவருகின்றன. குறைப்பிரசவம், குறைந்த எடையுடன் குழந்தைகள் பிறப்பது, கர்ப்பகாலச் சிக்கல்கள் போன்றவை வெப்ப அலைகளின்போது அதிகரித்துவருவதை இந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது.
- வெப்பத் தாக்கம் காரணமாகக் குறைப்பிரசவம் ஆவது இந்தியாவில் 16 சதவீதம் அதிகரித்துள்ளது. பொதுவாகவே, குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புத் திறன் குறைவாக இருப்பதாலும், காற்று மாசுபாடு –அசுத்தத் தண்ணீர் போன்ற சுற்றுச்சூழல் அபாயங்களுக்குக் குழந்தைகள் எளிதில் ஆட்படுவதாலும் குழந்தைகளும் கூடுதல் பாதிப்புகளைச் சந்திக்கின்றனர்.

» **பொருளாதாரத் தாக்கங்கள்**

- காலநிலை மாற்றங்கள் இந்தியப் பொருளாதாரத்தையும் விட்டுவைக்கவில்லை. 2021இல் மட்டும் வெப்ப வெளிப்பாட்டின் காரணமாக, இந்தியத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 16,000 கோடி உழைப்பு மணி நேரத்தை இழந்துள்ளனர்.
- இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சமம். அடுத்து, ஒவ்வொரு டிகிரி செல்சியஸ் உற்பத்தியில் (GDP) சுமார் 54 சதவிதத்துக்குச் சமம். அடுத்து ஒவ்வொரு டிகிரி வெப்பம் அதிகரிக்கும்போதும், தொழில் துறை உற்பத்தித் திறன் இரண்டு சதவீதம் குறையும்.
- நீண்ட கால வெப்ப அலைகளுக்கு ஆட்படும் முறைசாராத் தொழிலாளர்கள் அதிக உடல்சோர்வு, மனச்சோர்வு, மன அழுத்தம், பதற்றம் போன்ற உளவியல் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும், கிராமப்புற மக்களும் பழங்குடியினரும் தங்கள் மரபு சார்ந்த வாழ்வாதார இழப்புகளைச் சந்திப்பதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.
- இது தவிர, உணவுப் பாதுகாப்பும் மிகுந்த நெருக்கடியில் இருக்கிறது. 2015 முதல் 2021 வரையிலான காலக்கட்டத்தில் வெள்ளம், அதிக மழைப்பொழிவு காரணமாக 339 லட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலத்தையும் வறட்சி காரணமாக 350 லட்சம் ஹெக்டேர் நிலத்தையும் இந்தியா இழந்துள்ளது.

» **கவனம் கோரும் தேசியச் செயல் திட்டங்கள்**

- இந்தியாவில் ஏற்கெனவே உள்ள காலநிலை மாற்றம் – மனித நலனுக்கான தேசியச் செயல் திட்டம் – மாநில அளவிலான திட்டங்கள் (National action plan on climate change and human health and state level action plan) நோய்க் கணிப்பு, நோய்க் கண்காணிப்பு, நோய்ப் பரவலைச் சமாளிப்பதற்கான தயார்நிலை போன்றவற்றை வலுப்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுகின்றன.
- எடுத்துக்காட்டாக, குஜராத் அரசால் 2013இல் அகமதாபாத்தில் முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்ட வெப்பச் செயல் திட்டத்தின்கீழ் குளிர்க் கூரைகள் அமைத்தல், நகர்ப்புறத்தைப் பசுமையாக்குதல், எச்சரிக்கை அமைப்புகளை அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் 130க்கும் மேற்பட்ட நகரங்களுக்கும் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

## » ‘திருஷ்டி’ செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பியது கேலக்ஸ்–ஐ

- இரவு நேரத்திலும், மேக கூட்டத்திலும் தெளிவாக படம் பிடிக்கும் ‘திருஷ்டி’ செயற்கை கோளை, கேலக்ஸ்–ஐ என்ற இந்திய ஸ்டார்ட் அப் நிறுவனம் விண்ணுக்கு அனுப்பியுள்ளது.

- இந்திய ஸ்டார்ட்-அப் நிறுவனம் கேலக்ஸ்-ஐ 'திருஷ்டி' என்ற புவி கண்காணிப்பு செயற்கை கோளை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஃபல்கன் 9 ராக்கெட் மூலம் விண்ணுக்கு நேற்று அனுப்பியது.
- இதில் மல்டிஸ்பெக்ட்ரல் கேமரா (Multispectral camera) சின்தெடிக் அபார்ச்சர் ரேடார் (SAR) இமேஜர் ஆகிய இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன.
- இதனால் இந்த செயற்கைக் கோள், மேகக்கூட்டங்கள் மற்றும் இருளை ஊடுருவி மிக தெளிவான படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பும். இதனால் இது இந்திய செயற்கைக் கோள்களில் தனித்துவமானது.
- இதன் தரவுகள் உளவுத் தகவல்களுக்கு பயன்படுத்தப்படலாம் என்பதால், இந்த செயற்கை கோள் பாகிஸ்தான் மற்றும் சீனாவுக்கு புது தலைவலியாக அமையும் என கூறப்படுகிறது.
- திருஷ்டி செயற்கைக் கோளுக்கான யோசனை இந்தியாவின் புவியியல் மற்றும் காலநிலையை அடிப்படையாகக் கொண்டு உருவானது. இந்தியா ஒரு வெப்பமண்டல நாடு. மேற்கத்திய நாடுகளை விட இங்கு மேகங்கள் அதிகம். மேற்கத்திய நாடுகள் இந்தச் சிக்கலை எதிர்கொண்டதில்லை.
- இங்கு மேகமூட்டம் அடிக்கடி மற்றும் நீண்ட காலம் நீடிக்கும் என்பதால், வழக்கமான ஆப்டிகல் செயற்கைக்கோள்கள் பெரும்பாலும் பலனற்றதாகி விடுகின்றன.
- எந்தவொரு நேரத்திலும் பூமியின் நிலப்பரப்பில் 70 சதவீதம் மேகங்களால் மூடப்பட்டிருக்கும். கடல் பகுதிகளில் இது 90 சதவீதமாக இருக்கும்.
- எனவே, குறிப்பாக வெப்பமண்டலப் பகுதிகளில் பத்து படங்களில் ஏழு படங்கள் மேகமூட்டத்துடனேயே இருக்கும். செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்துபவர்களுக்கு மேகங்கள் வெறும் இடையூறு மட்டுமல்ல, அவை ஒரு திரையைப் போன்றது. தெளிவான படங்கள் கிடைக்காது.
- பேரிடர் மேலாண்மை, விவசாயம், உள்கட்டமைப்பு கண்காணிப்பு அல்லது பாதுகாப்பு போன்ற பணிகளுக்கு தெளிவான படங்கள் மிகவும் அவசியம்.
- இதற்காகவே மேகங்களை ஊடுருவிப் பார்த்து துல்லியமான தகவல்களைப் பெறும் தொழில்நுட்பத்தை கேலக்ஸ்-ஐ உருவாக்கியுள்ளது.
- திருஷ்டி செயற்கைக் கோளில் உள்ள மல்டிஸ்பெக்ட்ரல் கேமரா மற்றும் சின்தெடிக் அபார்ச்சர் ரேடார் இமேஜர் எதையும், எல்லாவற்றையும் ஊடுருவிப் பார்க்கும் திறன் பெற்றது.

## நிதி ஆயோக் முழு நேர உறுப்பினர்களாக ஆர். பாலசுப்பிரமணியம், ஜோரம் அனியா நியமனம்

- நாட்டின் முதன்மை கொள்கை ஆலோசனை அமைப்பாக நிதி ஆயோக் விளங்குகிறது. இதன் தலைவராக பிரதமர் இருக்கிறார்.
- இந்நிலையில், கடந்த ஏப்ரல் 24-ம் தேதி நிதி ஆயோக்கில், அசோக் குமார் லஹிரியை துணைத் தலை வராகவும், ராஜீவ் கவுபா, கே.வி.ராஜு, கோபர்தன் தாஸ், அபய் கரந்திகர் மற்றும் எம். ஸ்ரீனிவாஸ் ஆகியோரை முழு நேர உறுப்பினர்களாகவும் பிரதமர் நியமித்திருந்தார்.
- இந்நிலையில், கல்வியாளர்கள் ஜோரம் அனியா மற்றும் ஆர்.பாலசுப்பிரமணியம் ஆகியோரை நிதி ஆயோக் அமைப்பின் முழு நேர உறுப்பினர்களாக நியமிக்க பிரதமர்மோடி ஒப்புதல் அளித்தார். இதன்படி, முழுநேர உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.
- அருணாச்சல பிரதேசத்தின் பழங்குடியின சமூகமான நிஷி சமூகத்திலிருந்து முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்மணி ஜோரம் அனியா.
- இலக்கியம், கலாச்சாரம் போன்றவற்றில் அனியா குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். மற்றொரு புதிய உறுப்பினரான ஆர். பாலசுப்பிரமணியம், 'மிஷன் கர்மயோகி திட்டத்தின் கீழ் உள்ள திறன் மேம்பாட்டு ஆணையத்தின் மனிதவள உறுப்பினராக உள்ளார்.
- இவர் பல புத்தகங்களை எழுதியுள்ளார். குறிப்பாக, பிரதமரின் 50 ஆண்டுகால பொதுவாழ்வை மையமாகக் கொண்டு 'Power Within; The Leadership Legacy Of Narendra Modi 'என்ற தலைப்பில் எழுதிய புத்தகம் 2024-ல் வெளியானது.